1990 ஏப்ரல் 23]

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலே எந்தப் பகுதியிலேயும் சுற்றுலா விடுதிகள் கட்டப்படவில்லை. குறிப்பாக திருவண்ணாமலை பகுதியிலே புகழ்பெற்ற கோவிலும், ரமண மகரிஷியினுடைய ஆசிரமும், மற்றும் சாத்தனூர் அணையும் அருகாமையில் இருக்கிறது. ஏற்கெனவே சுற்றுலாத்துறை மூலமாக கேட்கப்பட்டு நகராட்சி மூலம் 1½ ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் அதற்கான திட்டம் ஏதும் தயாரிக்கப்படவில்லை. இதை உடனடியாகச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, 1½ ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருந்தால், மகிழ்ச்சி. சுற்றுலாத் துறை ஏற்றுக்கொள்ளும். நடவடிக்கை எடுக்கப்படும்.

நுகர்பொருள் அங்காடிகளைப் பிரித்தமைத்தல்.

*349 1. திரு. மா. சுந்தரதாஸ்:
திரு. அ. மாரிமுத்து :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நுகர்பொருள் அங்காடிகளில் 500 உணவுப் பொருள் வழங்கும் அட்டைக்குமேல் உள்ள கடைகள் இரண்டாகப் பிரிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் பிரிக்கப்படும்?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அரசு 26—12—1989 ஆம் தேதி அன்று அனைத்து நியாயவிலைக் கடைகளையும் ஒழுங்குபடுத்தி ஒவ்வொரு கடைகளிலும் 800 குடும்ப அட்டைகளுக்கு மிகாமல் பார்த்துக் கொள்ளுமாறு ஆணையிட்டுள்ளது. இது படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே, ஒரு நியாய விலைக்கடைக்கு ஏறத்தாழ 15 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து அரிசி வாங்க மக்கள் வருகிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா? குறிப்பாக என்னுடைய தொகுதியில் உள்ள மலையோரப்பகுதிகளிலே உள்ள மக்கள் 15 கிலோமீட்டர் தூரம் நடந்து வருகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களிலேயாவது 500-க்கு மேற்பட்ட கார்டுகள் இருந்தால், அங்குள்ள ரேசன் கடைகளை இரண்டாகப் பிரிக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, 15 கிலோ மீட்டர் தூரம் தள்ளிச் சென்று இந்தப் பொருட்களை வாங்குவதற்கான சூழ்நிலை ஏதாவது இருக்கு மானால் அதை மாண்புமிகு உறுப்பினர் எனக்குத் தெரிவிக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட இடங்களுக்கு, பகுதி நேரக் கடைகள் ஆரம்பிக்கலாம் என்று அரசு ஏற்கனவே அறிவுறுத்தியிருக்கிறது.

திரு. வ. அன்பழகன் : தலைவர் அவர்களே, தற்போது உணவுப் பொருட்கள் வாங்குகின்ற அந்த அட்டையினுடைய வடிவமைப்பு அவ்வளவு சரியாக இல்லை. பாமர மக்கள் பயன் படுத்துகின்றபோது, நடைமுறையிலே அது கிழிந்துவிடுகிறது. எனவே அந்த வடிவமைப்பை மாற்றி, ஒரு பாஸ் புத்தகம் போன்று, ஒரு புதிய வடிவமைப்பில் அந்த அட்டைகளை வழங்க அரசு ஆவன செய்யுமா என நான் அறிய விரும்புகிறேன்.

9-30 மணி

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலப் போக்கில் அது பரிசீலிக் கப்படும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேரக் கடைகளைத் திறப்பதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பகுதி நேரக் கடை வைப்பதற்கு அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் இலவசமாக இடம் கொடுத்தால்தான் பகுதி நேரக் கடைகள் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. அப்படி ஆரம்பிக்கப்பட்ட பகுதிகளுக்கு கடை வாடகை கொடுப்பதற்கு துறை மூலம் ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற சங்கடங்கள் இருக்குமேயானால், அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுகர்பொருள் அங்காடிகள் 5, 6 குடியிருப்புகளுக்கு சேர்த்து ஒரு இடத்தில் இருக்கக் கூடிய நிலை பல இடங்களில் இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு குடியிருப்பிலும், வாரத்தில் ஒரு நாள் என்று அந்த 5 நாட்களில் 5 குடியிருப்புகளில் அங்கு போய் போடக்கூடிய முறையிலே ஏதாவது ஒரு சின்ன இடத்திலே அல்லது யாராவது ஒருவர் வீட்டில் அதற்கு ஏற்பாடு செய்து அங்கே போய் அந்த அங்காடிகளில் இருக்கக் கூடியவர்கள் பொருள்களை விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவிர்க்கமுடியாத சில மலைப் பாங்கான பகுதிகளில் சில ஏற்பாடுகளை செய்து ஆங்காங்கே பகுதி நேரக்கடைகளை திறந்து அங்கே உள்ளவர்களுக்கு அத்தியா வசியப் பண்டங்களை வழங்குகின்ற ஏற்பாட்டை அரசு செய்திருக்கிறது. ஆனால் ஒவ்வொரு காலனியிலும் ஒரு கடையைத் திறப்பது என்பது 'நாட் வையபிள்' என்கின்ற அடிப்படையில் அது சாத்தியம் இல்லாத சூழ்நிலையை ஏற் படுத்தும் என்ற காரணத்தினால் அத்தகைய ஏற்பாடு இல்லை. எங்கெங்கு பகுதி நேரக் கடைகள் தேவைப்படுகின்றதோ, அங்கு அவசியம் கருதி பகுதி நேரக் கடைகள் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக ரேஷன் கடைகளை ஆரம்பிப்பதற்கு உத்தரவு பெறுவதற்கு அரசிடம் வர வேண்டியிருக்கிறது. அந்த உத்தரவை வழங்குகின்ற அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கே வழங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நியாய விலைக் கடைகளில் வேலை செய்து கொண்டிருப்பவர்களை மீண்டும் வேலைக்கு சேர்ப்பதற்கு குழு அமைப்பது பற்றி இந்த அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லுகிறபோது 800 குடும்ப கார்டுகள் அடங்கிய பகுதியில் ஒரு கடை திறக்கப்படும் என்று சொன்னார்கள். சென்னையிலே 1,500 க்கு மேற்பட்ட கார்டுகள் இருக்கின்றன. டிசம்பர் மாதமே அதற்கான உத்தரவு போடப்பட்டது என்று அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். இன்னும் அதற்கான சூழ்நிலை சென்னையிலே இல்லை. அதை வேகப்படுத்தமுடியுமா என்பதையும், அதே நேரத்தில் 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டருக்கு மேலே தள்ளிப் போய் ரேஷன் பொருட்களை வாங்கக் கூடிய ஒரு சூழ்நிலை சென்னையிலே இருக்கிறது. அதே பகுதிகளிலே கடைகளை ஆரம்பிக்கின்ற எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் ஆலோசனைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிளை அங்காடி அமைப்பதற்கு நிரந்தரக் கட்டிடம் தேவைப்படுகிறது. கூரைக் கட்டிடத்தில் அதை வைக்க முடியாது. ஏனென்றால் உணவுப் பொருட்கள் காணாமல் போய் விடும். ஆகவே நிரந்தரக் கட்டிடம் கட்டுவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யவேண்டும். அதே நேரத்தில் 3 கிலோமீட்டர் இருந்தால் போதும், 500 கார்டுகள் இருந்தால் போதும் என்று முன்னாள் அமைச்சர் இந்த அவையிலே அறிவித்ததாக எனக்கு நினைவு. அது சரியா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நியாய விலைக் கடைகள் எல்லாம் ஒரே மாதிரியாக இருக்கவேண்டுமென்கின்ற அடிப் படையில் அரசு ஜவஹர் வேலைவாய்ப்புத்திட்டங்களின் கீழ் அத்தகைய கட்டிடங்களை உருவாக்கமுடியுமா என்று இப்போது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. எதிர்க்காலத் தில் அப்படிப்பட்ட கட்டிடங்கள் கட்டுவதற்கான வாய்ப்பு உள்ளது என்பதையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இன்னொரு கருத்தை அவர்கள் சொன்னார்கள். 500 கார்டு களுக்கு ஒரு கடை என்கின்ற கருத்தை இந்தத் துறைக்கு பொறுப்பு ஏற்றுக்கொண்டிருந்த முன்னாள் அமைச்சரவர்கள் அறிவித்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். அது பற்றிய விவரம் என்னிடம் இல்லை. அதற்கான விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் தெரிவிப்பாரேயானால் உரிய நடவடிக்கை நிச்சயமாக மேற்கொள்ளப்படும்.

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் தெரிவித்த அந்த 800 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக் கடை என்கின்ற அந்தக் கூடுதல் கடைகளை எப்போது துவங்க அரசு உத்தேசித்து இருக்கிறது என்பதையும், 500-க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ள கடைகளில் கூடுதலாக விற்பனையாளர்களை நியமிக்கின்ற உத்தேசம் அரசிடம் இருக்கிறதா என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 800 அட்டைகளுக்கு மேலாக உள்ள கடைகள் பிரிக்கப்பட்டு தனியாக கடைகளை உருவாக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஆங்காங்கே உள்ள தொடக்க நிலை சங்கங்கள் அங்கேயுள்ள நிதிநிலையை அடிப் படையாகக் கொண்டு, முதல் கட்டமாக 1,200 அட்டைகளும், அதற்கு மேலும் உள்ள கடைகளை தனியாகப் பிரித்து, புதிய கடைகளைத் தொடங்கிக் கொண்டிருக்கிறார்கள். அடுத்த கட்ட மாக படிப்படியாக 800 அட்டைகள் வரை உள்ள கடைகள் தனியாகப் பிரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.